**உணவுப் பொருள் பணவீக்கம் 10.60%**

First Published : 21 Oct 2011 01:46:30 AM IST

புது தில்லி, அக்.20 : அக்டோபர் மாதம் 8-ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் உணவுப் பணவீக்கம் இரட்டை இலக்கத்தை தாண்டி 10.60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

காய்கறிகள், பழங்கள், முட்டை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றமே, உணவுப் பணவீக்கம் உயர காரணம் ஆகும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. அக்.1-ம் தேதியுடன் முடிவுற்ற வாரத்தில் 9.32 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம், ஒரு வாரத்தில் 1.28 சதவீதம் அதிகரித்து, 10.60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இதே போன்று, 14.91 சதவீதமாக இருந்த எரிபொருள் பண வீக்கம், இப்போது, 15.17 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு இதே வாரத்தில் நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில், காய்கறிகளின் விலை 17.59 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் 7.42 சதவீதமும், பழங்களின் விலை 12.39 சதவீதமும், முட்டை, காய்கறி,மீன் ஆகியவற்றின் விலை 14.10 சதவீதமும், பால் விலை 10.80 சதவீதமும் உயர்ந்துள்ளன.

உருளைக்கிழங்கு விலை 1.73 சதவீதமும், அரிசி விலை 4.42 சதவீதமும், சோளம் உள்ளிட்ட சிறு பயறுகளின் விலை 4.73 சதவீதமும் குறைந்துள்ளது.

அக்டோபர் 8-ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் வெங்காயத்தின் விலை 11.27 சதவீதமும், கோதுமை விலை 0.18 சதவீதமும் குறைந்துள்ளன. முதன்மை உணவுப் பொருள்களின் விலை 11.18 சதவீதமாக உள்ளது. இதற்கு முந்தைய வாரம் இது 10.60 சதவீதமாக இருந்தது. மொத்த விலை குறியீட்டெண்ணில், முதன்மை உணவுப் பொருள்களின் பங்கு 20 சதவீதமாக உள்ளது. இழைகள், எண்ணெய் வித்துகள், கனிமங்கள் போன்ற உணவு சாராப் பொருள்களின் பணவீக்கம் 8.51சத வீதமாக உள்ளது. இதற்கு முந்தைய வாரம் இது 9.59 சதவீதமாக காணப்பட்டது. எரிபொருள் மற்றும் மின்சாரத்தின் பணவீக்கம் 15.17சதவீமாக உள்ளது.

இரட்டை இலக்கமாக உயர்ந்துள்ள உணவுப் பொருள்களின் பணவீக்கத்தை குறைக்க மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். ஆசிய பங்குச் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பொருளாதார தேக்க நிலை போன்ற காரணங்களாலும் பணவீக்கம் உயர்ந்துள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வும் ஒரு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. கடந்த 2010ம் ஆண்டு முதல் வட்டி விகிதங்களை ரிசர்வ் வங்கி 12 முறை உயர்த்தி உள்ளது.

இப்போது இரட்டை இலக்கங்களாக உயர்ந்துள்ளதாலும், பணவீக்கமும் 9.72 சதவீதமாக உள்ளதாலும், பணப் புழக்கத்தை கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை மேலும் உயர்த்தலாம் எனத் தெரிகிறது. இதனால் தொழில் துறையினர் பாதிக்கப்படலாம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். வரும் 25ம் தேதி ரிசர்வ் வங்கி அதன் இரண்டாவது காலாண்டுக்கான நிதிக்கொள்கையை அறிவிக்கவுள்ளது.

உலகளாவிய அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, பொருள்கள் விநியோகத்தில் ஏற்படும் பிரச்னைகள் காரணமாக பணவீக்க உயர்வை கட்டுப்படுத்த முடியவில்லை என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும், இது அடுத்த ஆண்டு மார்ச் மாத வாக்கில் 7 சதவீதமாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**கோதுமை விலையை குவிண்டாலுக்கு ரூ.115 உயர்த்தப் பரிந்துரை**

First Published : 21 Oct 2011 03:53:26 AM IST

புதுதில்லி,அக்.20: கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை இப்போது உள்ளதிலிருந்து குவிண்டாலுக்கு ரூ.115 உயர்த்தித் தர வேண்டும் என்று வேளாண் அமைச்சகம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

இப்போது குவிண்டால் ரூ.1,170 என்ற அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. (போனஸ் தொகையாக ரூ.50 தரப்படுகிறது.)

குறைந்தபட்ச ஆதரவு விலை 2004-ல் குவிண்டால் ரூ.630 ஆக இருந்தது. படிப்படியாக உயர்த்தப்பட்டு இப்போது குவிண்டால் ரூ.1,170 ஆக இருக்கிறது. விலை அதிகமாக இருப்பதால் 2010-11-ல் புதிய சாதனை அளவாக 859.30 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு கோதுமை சாகுபடி இருந்தது.

விவசாயத் தொழிலாளர்களுக்கான சம்பளம், மின்சாரக் கட்டணம், டீசல் விலை, உரங்களின் விலை ஆகியவை உயர்ந்துவிட்டதால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை தரப்பட வேண்டும் என்பதற்காக குவிண்டாலுக்கு ரூ.115 அதிகமாக தரப்பட வேண்டும் என்று பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவுக்கு வேளாண் அமைச்சர் சரத் பவார் பரிந்துரைக் குறிப்பு அனுப்பியிருக்கிறார்.

**இன்று மழை வாய்ப்பு**

First Published : 21 Oct 2011 01:10:41 AM IST

சென்னை, அக்.20: சென்னையில் வெள்ளிக்கிழமை சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக வால்பாறை பகுதியில் 30 மில்லி மீட்டர் மழை பதிவானது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் இருக்கும். மாலை அல்லது இரவில் வெப்பச்சலனம் காரணமாக மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. சென்னையில் அதிகபட்சமாக 35 டிகிரி செல்சியஸ் வெப்பமும் குறைந்தபட்சம் 24 டிகிரி செல்சியஸ் வெப்பமும் நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

**வெண்டை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 20 Oct 2011 12:22:16 PM IST

பல்லடம், ஜூன் 20: வெண்டைக்காய்க்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் வெண்டை சாகுபடி செய்யப்படுகிறது. 45 நாள்களில் அறுவடை, நோய் தாக்குதல் குறைவு ஆகிய காரணங்களால் குறிப்பிடத்தக்க அளவில் சாகுபடி நடைபெறுகிறது. எனினும், அறுவடை செய்வது கடினமான பணி என்பதால், வெண்டை சாகுபடியில் விவசாயிகள் பெரிய அளவுக்கு ஆர்வம் காட்டுவதில்லை.

தற்போது ஒரு கிலோ வெண்டை ரூ.25-க்கு விற்பனையாகிறது. தொடர்ந்து கூடுதல் விலை கிடைப்பதால் வெண்டை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு நேரில் உதவும் பயணம்: வேளாண் துறை**

First Published : 20 Oct 2011 02:11:45 PM IST

புதுக்கோட்டை, ஜூன் 20: புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் பயணம் மேற்கொண்டு, விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான அனைத்து உதவிகளையும் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 வேளாண் வட்டாரங்கள் உள்ளன. இதில் 498 கிராம ஊராட்சிகள் அடங்கியுள்ளன. விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப செய்திகளையும், அரசு

செயல்படுத்தும் வேளாண் திட்டங்களையும் கொண்டு செல்வதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்து வருகின்றன.

எனவே, இதை நீக்கும் விதத்தில் வேளாண் துறையிலிருந்து உதவி வேளாண்மை அலுவலர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 15 நாள்களுக்கு ஒருமுறை பயணம் மேற்கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு அரசு வேளாண் திட்டங்களையும், பருவத்தில் சாகுபடி மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களையும் நேரடியாக விளக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வட்டாரங்களில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் திட்டமிட்ட நாளில் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் விவசாயிகள் நேரடியாக வேளாண் அலுவலரைத் தொடர்பு கொண்டு திட்டங்கள் குறித்தும், தொழில்நுட்பங்கள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

மானிய பரிந்துரை சீட்டு:

ஊராட்சிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரிடம் மானியத்தில் இடு பொருள்கள் பெறுவதற்கு மானிய பரிந்துரை சீட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

நிரந்தர பயணத் திட்டம் குறித்து ஊராட்சி அலுவலகங்களில் உள்ள அறிவிப்புப் பலகையில் குறிப்பிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டம் குறித்து குடுமியான்மலையில் உள்ள ஸ்டாமின் கூட்ட அரங்கில் அனைத்து உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில், நிரந்தர பயணத் திட்டத்தின்படி ஊராட்சிகளுக்கு நேரில் சென்று அந்தப் பகுதி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளையும், வேளாண் திட்டங்களை விளக்கும் களப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு உதவி வேளாண்மை அலுவலரின் பயணத் திட்டம் குறித்து அறிந்து கொள்வதுடன், வேளாண் தொடர்பான திட்டங்கள், தொழில்நுட்பங்களையும் தெரிந்து கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

**ஆரல்வாய்மொழியில் 34.6 மி.மீ. மழை**

First Published : 20 Oct 2011 05:05:43 PM IST

நாகர்கோவில், அக். 19: ஆரல்வாய்மொழியில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக 34.6 மி.மீ. மழை பெய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைப்பகுதிகளிலும் பிறஇடங்களிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பெருஞ்சாணி- 9.2, புத்தன்அணை- 9, சுருளோடு- 25.6, கன்னிமார்- 2.2.

பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 1188 கனஅடி, பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 702 கனஅடி, சிற்றாறு 1 அணைக்கு விநாடிக்கு 40 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

பேச்சிப்பாறை அணையிலிருந்து 875 கனஅடி, பெருஞ்

சாணி அணையிலிருந்து 340 கனஅடி, சிற்றாறு 1 அணையிலிருந்து 40 கனஅடி தண்ணீர் பாசனத்துக்காகத் திறந்துவிடப்பட்டிருந்தது.

**கமுதி பகுதியில் தொடர்ந்து மழை: விவசாயப் பணிகள் மும்முரம்**

First Published : 20 Oct 2011 03:40:00 PM IST

கமுதி, அக். 19: கமுதி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவக் காற்றால் ஆடி, ஆவணி மாதங்களில் மழை பெய்யும் என்று விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் மழை பெ ய்யாததால் ஆடிப் பட்டம் தேடி விதை என்ற பழமொழிக்கேற்ப விவசாயத்தைத் தொடங்க முடியாமல் விவசாயிகள் தவித்தனர். ஆங்காங்கே சிறிதளவு பெய்த மழையை நம்பி நெல் உள்ளிட்ட விதைகளை வயல்களில் விதைத்தனர்.


ஆனால் முளைத்த பயிர்கள், தொடர்ந்து மழை இல்லாததால் கருகின. ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் வயல்களில் பயிர்கள் வளர்ந்து பச்சைப் பசேல் என்று காட்சி அளிக்க வேண்டியதற்குப் பதிலாக, பெரும்பாலும் தரிசாகவே வயல்கள் காணப் பட்டன. வேலைவாய்ப்பின்றி விவசாயத் தொழிலாளர்கள் வருமானமின்றி கஷ்டப் பட்டனர். இந்த சூழ்நிலையில் கடந்த சில நாள்களாக கமுதி பகுதி ஊர்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வயல்களை விவசாயத்துக்கு தயார்படுத்தி வருகின்றனர். பல ஊர்களில் வரப்பு சீரமைத்தல், உழுத்ல, விதைத்தல், நாற்று நடுதல் உள்ளிட்ட விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஆனாலும் தொடர்ந்து அதிக அளவு மழை பெய்து, கண்மாய்களில் தண்ணீர் பெருகினால்தான் விவசாயம் பயன் அளிக்கும் என்றும், இல்லையெனில் பலத்த பணம் நஷ்டம்தான் ஏற்படும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். பருவம் தவறி விவசாயப் பணிகள் தொடங்குவதால் பயிர் சாகுபடி லாபமும் அதிகமாக இராது என்றும் கூறுகின் றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 10 சதவீதத்தை தாண்டியது**

அக்டோபர் 21,2011,02:28




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், அக்., 8ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில்,10.60 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில்,9.32 சதவீதம் என்ற அளவில் இருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத் துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பல்வேறு உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருந்தது. காய்கறிகள் விலை 17. 59 சதவீதம் உயர்ந்திருந்தது. மேலும், பழங்கள் (17.59 சதவீதம்), பால் (10.35 சதவீதம்), முட்டை, இறைச்சி, மீன் (14.10 சதவீதம்) போன்றவற்றின் விலையும் அதிகரித்து காணப்பட்டது. பருப்பு வகைகள்7.42சதவீதம் என்றளவிலும்,தானியங்கள் 5.41 சதவீதம் என்றளவிலும் உயர்ந்திருந்தது. இருந்த போதி லும்,வெங்காயத்தின் விலை 11.27 சதவீதம் என்றளவிலும், கோதுமையின் விலை 0.18 சதவீதம் என்றளவிலும் குறைந் திருந்தது.

மொத்த விலைக் குறியீட்டு எண்ணில், முக்கியபொருட்களின் பங்களிப்பு20 சதவீதத்திற்கும் அதிகமாக உள் ளது. கணக்கீட்டு வாரத்தில், முக்கிய பொருட்களின் விலை, 11.18 சதவீதம் என்றளவில் உயர்ந்திருந்தது. இது, முந்தைய வாரத்தில் 10.60 சதவீதமாக இருந்தது. நூலிழை, எண்ணெய்வித்துக்கள், தாதுப்பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய, உணவு சாராத பொருட்களின் விலை 8.51 சதவீதமாகக் குறைந்திருந்தது.இது,இதற்கு முந்தைய வாரத்தில், 9.59 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப் பட்டது.கணக்கீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் விலை 15.17 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

இது, முந்தைய வாரத்தில் 15.10 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருள் பணவீக்கம், சென்ற ஆக., 20ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இரட்டை இலக்கத்தை எட்டியது. இதைத் தொடர்ந்து குறைந்து வந்த உணவுப் பொருள் பணவீக்கம், மதிப்பீட்டு வாரத்தில் மீண்டும் இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது.நாட்டின் மொத்த பணவீக்கம் உயர்வதற்கு, சர்வதேச அளவில் விளை பொருட்களின் விலை அதிகரிப்பு தான் காரணம் என்று, அண்மையில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு நம்பிக்கை தரும்வனத்துறை மாதிரி தோட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2011,02:48 IST

மதுரை:தமிழக வனத்துறையின் பசுமலை வன விரிவாக்க மையத்தில் பல இன மரக்கன்றுகள், மூலிகை மாதிரி தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மண்ணுக்கேற்ற மரங்கள் நட விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. பசுமலை முற்றிலும் சரளை மண் நிறைந்த மலைப்பகுதி. இங்கு வன விரிவாக்க மையத்தில் 2.5 எக்டேரில் வேங்கை, சிசு, கடுக்காய், மலைவேம்பு, இலுப்பை, தடசு, பூந்திக்கொட்டை, ஈட்டி, மகிழம், சிவப்பு சந்தனம், முள்ளில்லா மூங்கில், சவுக்கு உட்பட பல்வேறு வகை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

பர்னிச்சர்கள் தயாரிக்க சிசுமரம், தடிமரங்களாக வேங்கை, பென்சில், தீக்குச்சி தயாரிக்க சிவந்தேனியா மரமும் பயன்படுகிறது. சிவப்பு சந்தனம் அணுக்கதிர் வீச்சை தடுக்கும் வல்லமை கொண்டது. இம்மரக்கட்டைகளை ஜப்பான் அணு விஞ்ஞானிகள் தங்கள் சட்டைப் பைகளுக்குள் வைத்துக்கொள்கின்றனர்.
குப்பைமேனி, விராலி, ஓமவள்ளி, பொன்னாங்கண்ணி, ஆடு தின்னாப்பாலை உட்பட பல்வேறு மூலிகைகள் வளர்க்கப்படுகிறது. நட்சத்திர பலன்களுக்கான மரங்கள் வளர்ப்பில் தனி கவனம் செலுத்தப்படுகிறது. அஸ்வினி நட்சத்திரத்திற்கு எட்டி, பரணி- நெல்லி, கார்த்திகை- அத்தி, ஸ்வாதி- மருது, பூரம்- பலாசம், உத்திரம்- அரளி உட்பட 27 வகை நட்சத்திர மரங்கள் வளர்க்கப்படுகின்றன. வன விரிவாக்க அலுவலர் ராஜசேகரன் கூறியதாவது: சிவப்பு சந்தனம் சென்னை, ஆந்திராவின் கடப்பா, ஈட்டி மரம் கொடைக்கானல், ஊட்டியில் வளரக்கூடியவை. அவற்றை கடிமனமான சரளை மண் பகுதியில் வளர்த்துள்ளோம். இது விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தத்தான். தனியார் நிலங்களில் நட இலவச மரக்கன்றுகள் வழங்குகிறோம்.மண்ணுக்கேற்ற மரங்கள் வளர்த்து லாபமடைய விவசாயிகள், மாணவர்கள், சுய உதவிக்குழுக்களுக்கு இலவச தொழில்நுட்ப பயிற்சி அளிக்கிறோம். மண்புழு உர உற்பத்திக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.விபரங்களுக்கு 98427 -56239ல் தொடர்பு கொள்ளலாம்.

**மார்த்தாண்டத்தில் நேந்திரங் காய் விற்பனை அதிகரிப்பு; விலை சரிவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2011,01:44 IST

மார்த்தாண்டம் : மார்த்தாண்டம் மார்க்கெட்டில் நேந்திரங் காய் வருகை அதிகரித்ததை தொடர்ந்து விலை சரிந்துள்ளது. விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வடசேரி, மார்த்தாண்டம் மார்க்கெட்டுகள் பழங்களுக்கு பெயர் பெற்றது. மார்த்தாண்டம் மார்க்கெட் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் கூடுகிறது. மாவட்ட மலையோர பகுதிகளை உள்ளடக்கிய ஆறுகாணி, பத்துகாணி, பேச்சிப்பாறை மற்றும் மார்த்தாண்டம் சுற்றுவட்டார கிராம பகுதிகளான கரவிளாகம், நட்டாலம், பாகோடு, மேல்புறம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வாழை குலைகளை மார்த்தாண்டம் மார்க்கெட்டில் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

இந்த மார்க்கெட்டில் கடந்த ஒரு மாதமாக நேந்திரம் காய் மற்றும் பழம் விலை குறைந்துள்ளது. உற்பத்தி அதிகரித்ததால் அதிகமான பழங்கள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. தரமான நூறு ஏத்தன் பழம் 300 முதல் 400 ரூபாய் வரை விற்பனையாகிறது. மார்க்கெட்டில் ரசகதழி, மட்டி பழங்களை விட நேந்திரம் பழம் விலை குறைந்துள்ளது.

இது குறித்து மார்த்தாண்டம் மார்க்கெட் வியாபாரி லோகநாதன் கூறியதாவது: மார்த்தாண்டம் மார்க்கெட்டில் அனைத்து பழங்களும் கிடைக்கிறது. ஏத்தன் என்று சொல்லக்கூடிய நேந்திரம் குலைகள் குமரி மாவட்ட மலையோர பகுதிகள் மற்றும் மார்த்தாண்டம் சுற்றுவட்டார பகுதிகளில் அதிகமாக விளைச்சலாகிறது.

இதனால் மார்க்கெட்டிற்கு அதிக அளவில் விற்பனைக்கு வருகிறது. நீண்ட நாட்களுக்கு பிறகு தற்பொழுது விலை கடுமையாக குறைந்துள்ளது. விற்பனையும் அதிகமாக நடக்கிறது. திருமண சீசன் அடுத்த வாரம் துவங்க உள்ளது. அதன் பிறகு விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு வியாபாரி லோகநாதன் கூறினார்.

**விவசாயிகள் விருப்பத்திற்கு மாறாகபயிர்காப்பீட்டு பிரிமியம் பிடித்தம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2011,22:27 IST

தேனி:கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் பெறும் விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாக, பயிர் காப்பீட்டு பிரிமியம் பிடித்தம் செய்யப்படுகிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இக்கடனுக்கு கூட்டுறவு வங்கிகளில் மட்டும் பயிர் காப்பீட்டு பிரிமியம் பிடித்தம் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். டாக்பியா(தமிழ்நாடு தொடக்க கூட்டுறவு வங்கி பணியாளர் சங்கம்) மாநில தலைவர் பாண்டுரங்கன் கூறுகையில்,"எல்லா வங்கிகளிலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விவசாயிகளிடம் இருந்து சிட்டா அடங்கல் பெறப்படுகிறது. விவசாயிக்கு புதிய கடன் வழங்கும் போது விவசாயி குறிப்பிட்ட பயிர் சாகுபடி செய்துள்ளரா, என்பதை கவனிப்பதில்லை. வட்டியில்லா கடன் வழங்கி விட்டு, காப்பீட்டு தொகை பிடித்தம் செய்து கொள்கின்றனர்,என்றார்.

**தென்னை ஓலைகளின் மூலம் மண்புழு உரம் தயாரிக்க உதவி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2011,22:25 IST

தேனி:தென்னை ஓலைகளின் மூலம் மண்புழு உரம் தயாரிக்க தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறது.தென்னை மரங்களின் அடியில் நிழல் வசதிகள் உள்ள இடத்தில் குழிகள் எடுத்தோ, அல்லது சிமென்ட் தொட்டிகளிலோ மண்புழு உரம் தயாரிக்கலாம். முதிர்ந்த தென்னை ஓலைகளை சேகரித்து மூன்று முதல் ஆறு மாதங்கள் வைக்க வேண்டும். துண்டுகளாக்கி பயன்படுத்தினால் மக்கும் பணி எளிதில் நடக்கும். ஓலைகளை அடுக்கி ஒரு டன் தென்னை ஓலைக்கு நூறு கிலோ மாட்டுச்சாணம் கலந்து ஓலைகளின் மீது தெளிக்க வேண்டும். மூன்று வாரங்கள் கழித்த பின்னர் இதில் ஆயிரம் மண் புழுக்களை விட வேண்டும். ஓலைகளின் மேற்பரப்பில் காய்ந்த புல், வைக்கோல், தென்னை ஓலைகளை வைத்து போட வேண்டும். 40 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

பறவைகள், எறும்புகள், பெருச்சாலி தொல்லைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.அறுபது முதல் தொண்ணூறு நாட்களுக்குள் எழுபது சதவீதம் தென்னை ஓலைகள் மட்கி உரமாகி விடும். இந்த தருணத்தில் தண்ணீர் தெளிப்பதை நிறுத்த வேண்டும். இதனால் மண் புழுக்கள் கீழ் பகுதியை நோக்கி குவியத்தொடங்கி விடும். பின்னர் கம்போஸ்ட்டில் இருந்து மண் புழுக்களை

தனியே பிரித்தெடுக்க வேண்டும். மண்புழு உரத்தை பயிர்களுக்கு பயன்படுத்தலாம் என தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2011,22:24 IST

வருஷநாடு:வருஷநாடு மலைப் பகுதிகளில் சாரல் மழை பெய்து வருவதால்,விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.வருஷநாடு,முருக்கோடை, காமராஜபுரம், தும்மக்குண்டு,வாலிப்பாறை,சிங்கராஜபுரம்,மேலப்பூசனூத்து,வண்டியூர்,வீரசின்னம்மாள்புரம்,காந்திபுரம், சாந்திபுரம், பவளநகர், கோயில்பாறை, வாய்க்கால்பாறை ஆகிய பகுதிகளில் மானாவாரி விவசாய நிலங்கள் அதிகமாக உள்ளது. தற்போது பெய்து வரும் சாரல் மழையால் விவசாயிகள் தங்களது நிலத்தினை உழவு செய்து பயிறு வகைகளை விதைத்து வருகின்றனர்.தோட்ட விவசாயிகளும் தங்களது கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தென்னை நார் கழிவில் இருந்து கம்போஸ்ட் உரம் தயாரிக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2011,22:22 IST

தேனி:தோட்டக்கலைத்துறை சார்பில் தென்னை நார்க்கழிவில் இருந்து கம்போஸ்ட் உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.கயிறு தொழிற்சாலைகளில் இருந்து கிடைக்கும் உபரிப்பொருள் தென்னை நார்க்கழிவு. இதில் 50 சதவீதத்திற்கு மேல் லிக்னின் மற்றும் செல்லுலோஸ் உள்ளது. எனவே மண்ணில் இடப்படும் போது எளிதில் மக்காது. எனவே மக்க வைக்க ஒரு டன் நார்க்கழிவிற்கு 5 கிலோ யூரியா, ஐந்து பாட்டில் புளுகேட்டஸ் சிவ்விக்காளான் விதை தேவைப்படும்.

150 சதுர மீட்டர் பரப்புள்ள தரையை சமமாக சீர்படுத்தி 100 கிலோ தென்னை நார் கழிவை பரப்ப வேண்டும். அதன் மீது ஒரு பாட்டில் காளான் விதையினை தூவி விட வேண்டும். அடுத்த அடுக்கில் 100 கிலோ தென்னை நார் கழிவு பரப்பி, அதன் மீது ஒரு கிலோ யூரியாவை தூவி விட வேண்டும். இதேபோல் 10 அடுக்குகள் அமைத்து காளான் விதையினையும், யூரியாவையும் மாறி மாறி தூவ வேண்டும். இதன் மீது நன்றாக தண்ணீர் தெளித்து ஒரு மாதம் மக்கச் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் 20 சதவீதம் ஈரத்தை தொடர்ந்து பராமரிக்க வேண்டும். மாறிய தென்னை நார் கழிவு பாதியாக குறைவதோடு, பழுப்பு நிறம், கரும்பழுப்பு நிறமாக மாறி விடும்.

இதன் பின்னர் உரமாக பயன்படுத்தலாம். தற்போது இந்த பயிற்சியை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

**வேட்டங்குடி சரணாலயத்திற்கு வெளிநாட்டு பறவைகள் வருகை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2011,00:00 IST



திருப்புத்தூர்: சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிகொள்ளுக்குடிப்பட்டி கண்மாயில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்திற்கு பறவைகள் வருகை அதிகரித்து வருகிறது. வழக்கமாக செப்டம்பரில் பறவைகள் வருகை துவங்கும். இந்த ஆண்டு பருவமழை முன்னதாக துவங்கியதால் ஆகஸ்ட்டில் பறவைகள் வரத் துவங்கின.

மழை தொடராததால் குறைந்த அளவு பறவைகளே இருந்தன.தற்போது ஓரளவு மழை பெய்துள்ளதால் ஏராளமான பறவைகள் வரத்துவங்கியுள்ளது. வெளிநாட்டுப் பறவைகளான வொயிட் ஐபீஸ், பிளாக் ஐபீஸ், நைட் ஹெரான்,பாண்ட் ஹெரான், கிரே ஹெரான், ஓபன் பில்ட் ஸ்டார்க், லிட்டில் காரமரெண்ட், டார்டர், ஸ்பாட் பில்ட் டக், கூட் உள்ளிட்ட பறவைகள் வந்துள்ளன. பசுமையான பின்னணியில் மரங்களில் தங்கியுள்ள பறவைகள் பார்க்க ரம்மியமாக உள்ளது. கண்மாய் நீரில் நீர்க்காகங்கள், வாத்துகள்,முக்குளிப்பான்கள் நீந்துவது பார்க்க அழகாக உள்ளது. காலை,மாலை இருவேளைகளிலும் பறவைகள் கூட்டம்,கூட்டமாக வானில் தோன்றி பறந்து வந்து மரங்களில் இறங்குவதைப் பார்த்து ரசிக்கலாம்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *அக்.8–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 10.6 சதவீதமாக உயர்வு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவுப் பணவீக்கம், அக்டோபர் 8–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் மீண்டும் இரட்டை இலக்க உயர்வினைக் கண்டு 10.60 சதவீதமாக அதிகரித்துள்ளது. காய்கறி, பழங்கள், பால் மற்றும் பருப்பு விலை உயர்ந்ததே இதற்கு காரணமாகும்.*

*முந்தைய வாரத்தில்...*

*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பணவீக்கம் முந்தைய வாரத்தில் 9.32 சதவீதமாக இருந்தது. இது, 2010–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் 15.72 சதவீதமாக இருந்தது. இதற்கு முன்னால் உணவு பணவீக்கம் நடப்பாண்டு ஆகஸ்டு 20–ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் இரட்டை இலக்க அதிகரிப்பை கண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*அக்டோபர் 8 வரையிலான வாரத்தில் காய்கறி விலை, முந்தைய ஆண்டின் இதே காலத்தை விட, 17.59 சதவீதம் உயர்ந்தது. பழங்கள் விலை 12.39 சதவீதம் அதிகரித்தது.*

*பால் விலை 10.80 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் போன்ற அசைவ உணவுப் பொருட்களின் விலை 14.10 சதவீதமும் உயர்ந்து காணப்பட்டது. பருப்பு வகைகள் விலை 7.42 சதவீதம் உயர்ந்திருந்தது. தானியங்கள் விலை 4.73 சதவீதம் அதிகரித்திருந்தது. எனினும் வெங்காயம் விலை 11.27 சதவீதம் குறைந்திருந்தது. கோதுமை விலை 0.18 சதவீதம் குறைந்து காணப்பட்டது.*

*கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட வாரத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கான பணவீக்கம் 11.18 சதவீதமாக உயர்ந்தது. இது, முந்தைய வாரத்தில் 10.60 சதவீதமாக இருந்தது. மொத்த விலைக் குறியீட்டு எண்ணைக் கணக்கிடுவதில் இப்பொருள்களின் பங்கு 20 சதவீதமாக உள்ளது. எண்ணெய் வித்துக்கள், நார், கனிமங்கள் உள்ளிட்ட உணவு அல்லாப் பொருள்கள் பணவீக்கம் 9.59 சதவீதத்திலிருந்து 8.51 சதவீதமாக குறைந்துள்ளது. எரிசக்தி பணவீக்கம் 15.10 சதவீதத்திலிருந்து 15.17 சதவீதமாக உயர்ந்தது.*

*விளைபொருள்கள் விலை*

*2010 டிசம்பரிலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கு மேல் இருந்து வருகிறது. இது, செப்டம்பர் மாதத்தில் 9.72 சதவீதமாக இருந்தது. சர்வதேச அளவில் விளைபொருள்கள் விலை உயர்ந்து வருவதே பணவீக்கம் உயர்ந்து வருவதற்கு காரணம் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். எனினும் 2012 மார்ச்சுக்குள் சுமார் 7 சதவீதம் என்ற அளவிற்கு பணவீக்கம் வரும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*